## ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு

# பழனிசாமி வரவேற்புப் பத்திரம் வாசிப்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, டிச. 20 -

**"ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு பழனிசாமி வரவேற்பு பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகமாகும்" என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது ஒன்றிய பா.ஜ.க.; அதற்கு ஒத்து ஊதுகிறார் திருவாளர் பழனிசாமி! #VBGRAMG திட்டத்தில் 125 நாட்கள் வேலை என்பது ஏமாற்று வேலையே!

100 நாட்கள் வேலை உத்தரவாதம் என்று சட்டம் இருந்தபோதே, பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு 20 முதல் 25 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்தது. அதற்கான ஊதியத்தொகையையும்திட்டச்செலவையும் மாதக் கணக்கில் விடுவிக்காமல் வஞ்சித்தனர். அந்த நிலுவைத் தொகையையும் நாம்போராடிப்பெறவேண்டிய அவலம்தான் இருந்தது.


**நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பை சந்திக்கும்!**

தற்போது, ஒன்றிய அரசின் விருப்பத்தின் பேரில் அதிகாரிகள் விரும்பினால் வேலை வழங்கலாம் என்று விதிகள் மாற்றப்பட்ட பிறகு, ஓரிரு நாட்கள் வேலை கிடைப்பதே அரிதாகப் போகிறது. நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பைச் சந்திக்கப் போகிறது.

திட்டச் செலவில் 40% தொகையை மாநிலங்கள் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை, #GST வரி மாற்றங்களுக்குப் பிறகு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மாநில அரசுகளுக்குத் தரப்படும் சுமை; தண்டனை!

கிராமப்புறப் பெண்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றி வந்த #MGNREGA திட்டத்துக்கு மூடுவிழா நடத்துவதற்குத் திருவாளர் பழனிசாமி அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.






சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை 17.12.2025 அன்று சேலம் அய்யந்திருமாளிகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். உடன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, தமிழ்நாடு மின்பகிர்மான கழக மேற்பார்வை பொறியாளர் திருநாவுக்கரசு, செயற்பொறியாளர் இராமச்சந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




**தி.மு.க. இளைஞர் அணி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21.12.2025 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.12.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் சிந்தனைக்கு விருந்து படைக்கத் தயாராகிறது

**முரசொலி**

**பொங்கல் மலர் 2026**

ஜனவரித் திங்கள் 15ஆம் நாள் வெளிவருகிறது. முன் பதிவிற்கு முந்துங்கள்...

**விலை ரூ.150/-**

